என்னிடத்தில் சொன்னார்கள். பெற்றோர்களும் வந்து சொன்னார்கள். எனக்கு மெத்த மகிழ்ச்சியாக இருந்தது. அப்படி நேரடியாகக் கொடுத்தாலும், அல்லது தகவல் கொடுத்தாலும், தகவல் வந்தாலும், உடனடியாக நடவடிக்கை எடுக்கின்ற முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் 'பிராக்டிகலாக' அந்த வங்கிகளிலே கடன் கொடுக்க மறுக்கிறார்கள். அதில் நீங்கள் தனியாகக் கவனம் செலுத்தி, அதை மீண்டும் பரிசீலனை செய்து சமூக நல மாவட்ட அலுவலர்களைக் கலந்து பேசி, வங்கிகளுடைய பீல்டு ஆபிசர்ஸ், லீட் பாங்க் அவர்களையும் பார்த்து, அவர்கள் கட்டாயமாக கொடுக்க வேண்டுமென்று ஒரு அறிவுரையை நீங்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த நேரத்தில், இதிலே உடனடியாக நடவடிக்கை எடுப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையற்றோர் மட்டுமல்ல, வாழ்க்கையில் நலிவடைந்த பெண்களுக்கும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் உதவிகளைச் செய்து வருகிறார்கள். அண்மையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக் கழகத்தில் சந்தித்த பெண்களுக்கு அவர்களை ஊருக்கு திருப்பி அனுப்புகின்ற வேளையில் தன்னுடைய சொந்தப் பணத்திலிருந்து ரூ. 10,000 அவர்கள் கையிலே கொடுத்து, புரட்சித் தலைவி அவர்கள் அவர்களை, ஊருக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே இதிலே அக்கறை செலுத்துகின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசு மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கையில் உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதனைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 662, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு சமூக நலத்துறை துறை அமைச்சர்.

662—

தோல் பொருட்கள் ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் தொழிற் கூடங்கள் அமைத்தல்.

*9274— திரு. கே. செல்வராஜ் :

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சமூகநலத் துறை மூலம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் கணவனால் கைவிடப்பட்ட மற்றும் விதவை பெண்களுக்கு

உதவும் வகையில் தோல் பொருட்கள் ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் தொழிற் கூடங்கள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் அமைக்கும் திட்டம் இல்லை. ஆனால் குறிப்பிட்ட ஒன்று, இரண்டு இடங்களில் ஆயத்த ஆடை தயாரிக்கும் அமைப்பை உருவாக்கலாமா என்பதை அரசு பரிசீலித்து வருகிறது.

(முற்பகல் 10-35)

திரு. கே. செல்வராஜ் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சியில் ஆண்டுக்கு ஒரு திட்டம் என அறிவித்து வந்த காலங்கள் போய், இந்தச் சட்டமன்ற கூட்டத் தொடரில் தினசரி மக்கள் நல்வாழ்வு திட்டங்களாக அறிவித்து, மாபெரும் புரட்சிகரமான திட்டங்களாக அறிவித்து இந்தியாவிலேயே வரலாற்று சிறப்பு மிக்க சரித்திரத்தில் சாதனை புரிந்து வரும் நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு விதவைப் பெண்களுக்கு, படித்து பட்டதாரிகளாக இருக்கிற வேலைஇல்லாத ஏழை பெண்களுக்கு இந்த ஏற்றுமதி திட்டங்கள் மூலம் அதாவது கைத்தறி ஆடைகளை, ரெடி மேட் ஆடைகளை ஏற்றுமதி செய்வதை, தோல் பொருள்கள் ஏற்றுமதி செய்வதை தனி வாரியமாக அமைத்து சமூக நலத்துறை மூலம் அவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்க இந்த ஆண்டே திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே அந்தத் திட்டம் உள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமீபத்திலே இந்த மாதிரியான ஆயத்த ஆடைகள் தயாரிப்பு மையங்களை ஏற்படுத்த வேண்டும் என்று சமூக நலத் துறைக்கு அறிவுறுத்தி உள்ளார்கள். அதன் அடிப்படையில் எந்தெந்த மையங்களில் இவைகளை துவக்கலாம் என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இந்தத் தொழில் மையங்களை திருப்பூர், மதுரை, மற்றும் சென்னை போன்ற இடங்களில் ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த வாய்ப்புகளை பயன்படுத்தி சமூக நலத்துறையில் நல்ல முறையில் பரிசீலனை செய்து அந்தத் திட்டத்தை இந்த ஆண்டே துவக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினா எண். 663, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.